TAMIL NADU AGRICULTURE ... REGISTRY
- 4 OCT 2010

சுருக்கம்

வேளாண்மை – மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பு செம்மை நெல் சாகுபடி தொழில்நுட்பத்திற்கு **"ராஜராஜன் 1000"** எனப் பெயரிட்டு ஆணை வெளியிடப்படுகிறது.

வேளாண்மை (வேஉ 4) துறை

திருவள்ளுவர் ஆண்டு 2041, புரட்டாசித் திங்கள் 12 ஆம் நாள்

அரசாணை (நிலை) எண். 220 நாள்: 28.09.2010

படிக்க:

26.9.2010 அன்று தஞ்சாவூரில் நடைபெற்ற ராஜராஜன் 1000 ஆண்டு நிறைவு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு.

******

ஆணை:–

உணவு உற்பத்தியைப் பெருக்க வேளாண் விஞ்ஞானிகள் பல்வேறு தொழில்நுட்பங்களை அவ்வப்போது கண்டுபிடித்து விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தி வருகின்றனர். சாதாரண நெல் சாகுபடி முறைப்படி எக்டர் ஒன்றுக்கு சராசரி மகசூலாக 4500 கிலோ நெல் உற்பத்தி கிடைக்கிறது. நெல் விளைச்சலில் உற்பத்தித்திறனை அதிகரிக்க கண்டுபிடிக்கப்பட்ட புதிய தொழில்நுட்பத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2007 ஆம் ஆண்டு செம்மை நெல் சாகுபடி (System of Rice Intensification) என பெயரிடப்பட்டு, விவசாயிகளிடையே அறிமுகப்படுத்தப்பட்டு, பரவலாக்கப்பட்டு வருகிறது. இந்த தொழில்நுட்பத்தின்படி ஒரு எக்டருக்கு 9000 கிலோ நெல் உற்பத்தி கிடைக்கின்றது.

2. மாமன்னர் ராஜராஜ சோழன் வரலாற்றுச் சிறப்புமிக்க தஞ்சை பெருவுடையார் கோவிலைக் கட்டி முடித்து 1000 ஆண்டு நிறைவடைந்ததை போற்றும் வகையில் தமிழக அரசால் விழா எடுக்கப்பட்டது. கட்டிடக் கலைக்கும், வேளாண்மைக்கும் மிக முக்கியத்துவம் அளித்த, தமிழகத்தின் நெற்களஞ்சியமான சோழமண்டல மன்னனான ராஜராஜனை கௌரவிக்கும் வகையில், அதிக உற்பத்தித் திறன் அளிக்கவல்ல "செம்மை நெல் சாகுபடி" தொழில்நுட்பத்திற்கு "ராஜராஜன் 1000" என 26.09.2010 அன்று தஞ்சாவூரில் நடைபெற்ற நிறைவு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பெயர் சூட்டப்பட்டது.

( த.பி.பா.)

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து, இதுவரை "செம்மை நெல் சாகுபடி" என்று அழைக்கப்பட்ட தொழில்நுட்பம் இனி "ராஜராஜன் 1000" என்ற பெயரால் அழைக்கப்படும் என்று அரசு ஆணையிடுகிறது.

( ஆளுநரின் ஆணைப்படி )

பா. இராம மோகன ராவ்,
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

வேளாண்மை ஆணையர், சென்னை – 5
பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 3
விதைச் சான்றுத் துறை இயக்குநர், கோயம்புத்தூர் – 13
செயல் இயக்குநர் (பொறுப்பு), தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, சென்னை – 97

நகல்:
முதலமைச்சரின் செயலாளர், சென்னை – 9
வேளாண்மைத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளரின்
தனிச் செயலர், சென்னை – 9
வேளாண்மைத் துறையின் அனைத்துப் பிரிவுகள், சென்னை – 9
உதிரிகள் / இருப்புக் கோப்பு

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்

Endt No. AA/Rajarajan 1000/2010
dt. 10.2010

Copy communicated for information.

Tamil Nadu Agricultural University
COIMBATORE [illegible]

To
All University Officers
All Heads of Dept/Stations/KVK's
cc: to Stock file

6.10.10 6/10/10